உ

ர/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்





# ஞானச்சுடர்

ஆவணி மலர்

1998




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வழி

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும். "

பொருள் :

இந்த வையகத்தில் இல்லறத்தில் கூறப்பட்டுள்ள இயல்புகளைக் கடைப்பிடித்து ஒருவன் வாழ்வானாயின். அவன் தேவனுக்கு நிகரான தன்மையில் வைத்து மதிக்கப்படுவான்.

ஸ்ரீ

### அருணாசல அக்ஷர மணமாலை

நூல்

அருணாசலசிவ அருணாசலசிவ
அருணாசலசிவ அருணாசலா !

26) கௌதமர் போற்றுங் கருணைமா மலையே (அ)
கடைக்கணித் தாள்வா யருணாசலா

27) சகலமும் விழுங்குங் கதிரொளி யினமன (அ)
சலச மலர்த்தியி டருணாசலா

28) சாப்பா டுன்னைச் சார்ந்துண வாயான் (அ)
சாந்தமாய்ப் போவ னருணாசலா

29) சித்தங் குளிரக்கதி ரத்தம்வைத் தமுதவா (அ)
யைத்திற வருண்மதி யருணாசலா

30) சீரை யழித்துநிர் வாணமாய்ச் செய்தருட் (அ)
சீரை யளித்தரு ளருணாசலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்/வண். நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 8

1998 ஆவணி

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1) | மானுடத்தை மேம்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் | 1 - 4 |
| 2) | செல்வச்சந்நிதி முருகன்மேல் பாடிய பாடல்கள் | 5 - 6 |
| 3) | கடல் கண்ட கால்வாய் | - 7 |
| 4) | பெருங்காயம் வேண்டாம் சீரகம்தான் வேண்டும் | 8 - 9 |
| 5) | வன்னி இலையின் மகத்துவம் | 10 - 11 |
| 6) | சந்நிதி | 12 - 14 |
| 7) | விதியையும் வெல்லலாம் | - 15 |
| 8) | ஆறுமுகனும் ஆறுபடை வீடுகளும் | 16 - 19 |
| 9) | பல்லாண்டு கூறுதுமே | 20 - 23 |
| 10) | செல்வச்சந்நிதி முருகன் நவமணிமாலை | - 24 |
| 11) | Easy Way to Learn English (Part—8) | 25 - 27 |
| 12) | விஞ்ஞான விளக்கம் | - 28 |

அன்பளிப்பு : மலர் ஒன்று 25/- ரூபா
வருட சந்தா தபால் செலவுடன் 325/- ரூபா.
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

திரு. க. ஸ்ரீகுகன்
(கரணவாய் தெற்கு, கரணவாய்)

திரு. சி. இராமகிருஷ்ணன்
(ஆசிரியர், கரணவாய்)

திரு. இ. பரம்சோதி
(கரணவாய்)

திரு. க. கதிர்காமத்தம்பி
(வல்வெட்டி)

திரு. வே. சந்திரசேகரம்பிள்ளை
(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

திரு. கு. துரைராஜா
(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், உடுப்பிட்டி)

ஆதிசக்தி பதிப்பகம்
(ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை)

கலையரசி பதிப்பகம்
(தொண்டைமானாறு)

ப. நோ. கூ. சங்கம் தலைமை அலுவலகம்
(வலிகிழக்கு, வடபகுதி, அச்சுவேலி)

ப. நோ. கூ. சங்கம் பனம் பொருள் உற்பத்தி தலைமை அலுவலகம்
(வலிகிழக்கு, வடபகுதி, அச்சுவேலி)

திரு. க. ஆனந்தராசா (ஆசிரியர்)
(அன்னதாசல், உடுப்பிராய்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் - ஆடி மாத வெளியீடு

## வெளியீட்டுரை :

தமிழர்களுடைய வரலாற்றிலும் எமது சமயத்திலும் ஆலயங்களிலும், அரண்மனைகளிலும்தான் நூல்வெளியீடுகள் நடைபெற்று வந்துள்ளன. இந்தவகையில் ஞானச்சுடரும் ஆச்சிரமத்திலிருந்து வெளிவருவது ஒரு புனிதத்தன்மையை மலருக்கு அளிப்பதாக ஆடிமாத மலரினை வெளியிட்டு சிறப்புரைத்த சிவத்திரு வ. குமாரசாமிஐயர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆத்மீகநோக்கில் வெளிவருகின்ற நூல்கள் புனிதமான நோக்கத்தைக் கொண்டிருக்கவேண்டும். அத்துடன் நூலைப் படிப்பதனால் மனம் அமைதியடையக்கூடியதாக இருக்கவேண்டும். அடியார்களைக் குழப்புகின்ற தன்மைகள் நூலில் இடம்பெறக்கூடாது. சந்நிதி ஆலயத்தில் மூலஸ்தானத்தில் முருகன் ஞானச் சுடராக இருக்கின்றான். அவன் அடியவர்களின் கொடிய இருளைப் போக்குகின்ற சக்தி உள்ளவனாகவும் திகழ்கின்றான். அதேபோலத்தான் இந்த ஞானச்சுடரும் அடியவர்களின் அறியாமையைப் போக்கி அவர்களுக்கு ஞானத்தை வழங்குகின்ற வகையில் வெளிவந்து கொண்டிருக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

## ஆய்வுரை :

ஆய்வுரையை திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் ஏழுமாதக் குழந்தையாக விளங்கும் இந்த ஞானச்சுடர் சந்திரன் சூரியன் உள்ளளவும் வாழவேண்டும் வளரவேண்டும் என வாழ்த்தியதுடன் இவ்வாறான நிறுவனங்கள் இருப்பதால் தான் இன்று எமது சமயம் வாழ்கிறது எனவும் குறிப்பிட்டார்.

எமது சமயத்தை வளர்க்கின்ற வகையில் தெய்வீகத் தன்மையும் அமைதியும் இருக்கின்றமையால் இந்தியா எமது சமயத்தை வளர்க்கும் என எதிர்பார்க்கிறோம். ஆனால் அவர்கள் இன்று சினிமா மோகத்தில் மூழ்கிக்காணப்படுகின்றனர். ஆலயங்களை சினிமாப் படப்பிடிப்புக்குப் பயன்படுத்துவது மட்டுமன்றி மூலஸ்தானம் வரை கதாநாயகர்கள் கதாநாயகிகளைக் கூட்டிச் சென்று படம் எடுக்கும் அளவுக்கு அங்கே எமது சமயத்தைத் திரித்துக் கொண்டு சென்றுள்ளனர். ஆகவே இந்த நிலையில் வழிகாட்டக்கூடிய நிலையாக பொறுப்புணர்வுடன் நாம் செயற்படாவிட்டால் எமது மதத்தை வளர்க்கமுடியாது போய்விடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் மலரில் இடம்பெற்ற கட்டுரைகளைச் சுருக்கமாக ஆய்வு செய்ததுடன் சந்நிதியுடன் தொடர்புடைய வரலாற்றுக் கட்டுரைகள் மலரில் இடம்பெற வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# வாழ்த்துகின்றோம்!

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால்

**22 - 07 - 1998 இல் கலாபூஷண விருது வழங்கிக் கௌரவிக்கப் பெற்றவரும்**

தமது அறுபதாவது அகவை பூர்த்தியானவரும் ஆகிய

தேர்ச்சுரபி விஸ்வப்பிரமஸ்ரீ

## திரு. ஆறுமுகம் ஜீவரட்ணம் அவர்கள்

சகல நலன்களுடன் சீர் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

தேவசிற்பி விஸ்வகன்மா சிந்திக்கும் படியாகத்
தேர்ச்சுரபி யாகவே சித்திரத்தேர் வடிவமைக்கும்
ஜீவரட்ண ஆசாரி திவ்யகலை மேன்மேலோங்கித்
தேசமெல்லாம் புகழ்பரப்பிச் சிரஞ்சீவி என வாழ்க!

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டு பேரவையினர்

தொண்டைமானாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடத்தை மேம்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

## ( மகாபாரதத்திலிருந்து )

## மங்கையின் வஞ்சினம்

பரதவ குலப் பெண்ணாகிய சத்தியவதியைச் சந்தனு மன்னன் வேதவிதிப்படி மணம் புரிந்து, இல்லறமாம் நல்லறத்தினை மேற்கொண்டான். இல்லறத்தின் இனிய பயனாய், சித்திராங்கதன், விசித்திர வீரியன் என்னும் இரு புதல்வர்கள் சந்தனு மன்னனுக்குப் பிறந்தனர். புதல்வர்கள் இருவரும், கலைகள் பல பயின்றும், அரசர்க்குரிய வில்வாள் பயிற்சிகளில் மேன்மையுற்றும் வளர்ந்து வரலாயினர். இத்தருணத்தில் சந்தனு மன்னன் மண்ணுலக வாழ்வை நீத்து இறையடி அடைந்தான். இதனால் கவலையுற்ற பீஷ்மர் சத்தியவதியின் கருத்துப்படி, அரச தர்மத்துக்கமைய மூத்த புதல்வனாகிய சித்திராங்கதனுக்கு முடி சூட்டி, ஆட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்து அவனுக்குப் பக்கபலமாக இருந்து வந்தார்.

சித்திராங்கதன் மிகவும் சிறப்புடன் தன் ஆட்சியை நடாத்தி வந்தான். இவ்வேளை 'சித்திராங்கதன்' என்னும் பெயர் கொண்ட கந்தர்வன் ஒருவன் இவன் மீது கோபம் கொண்டு மன்னன் சித்திராங்கதனுடன் போர் தொடுக்கலானான். கந்தர்வனுடன் சித்திராங்கதன் மிகவும் கடும் போரில் ஈடுபடலானான். மூன்று ஆண்டுகள் வரை தொடர்ந்து போர் நடைபெற்றது. இதனால் மன்னன் சித்திராங்கதன் கந்தர்வனால் கொல்லப்பட்டான். இதனால் பெருங்கவலையுற்ற பீஷ்மரும் சத்தியவதியும், இளையவனான விசித்திர வீரியனுக்கு முடி சூட்ட நினைத்தனர். அன்னை சத்தியவதியின் விருப்பப்படி, விசித்திர வீரியனுக்கு முடி சூட்டிய பீஷ்மர் அரசியற் கருமங்களைத் தானும் கவனித்து வந்தார். இந்நிலையில் தன் புதல்வனுக்கு மணம் செய்ய விரும்பினாள் அன்னை சத்தியவதி. பீஷ்மருடன் கலந்தாலோசித்து ஏற்பாடுகளைக் கவனிக்கும்படி வேண்டிக் கொண்டாள்.

இவ்வேளை காசி மன்னனின் புதல்வியர் மூவருக்கும் சுயம்வரம் நடக்க விருப்பதை பீஷ்மர் அறிந்து கொண்டார். சுயம்வரத்தில் கலந்து கொண்டு தன் சோதரனுக்கு மணம் செய்ய விழைந்த பீஷ்மர், அன்னையின் அனுமதி பெற்று காசி நகருக்குச் சென்றனர். சுயம்வரத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீஷ்மர் வருகை தந்திருப்பதைக் கண்ட மன்னர்கள் பலரும், அவர் தன் அன்னை சத்தியவதியின் பொருட்டு சத்தியவதியின் தந்தைக்குச் செய்து கொடுத்த சத்திய வாக்கினை அறிந்திருந்தமையால், பீஷ்மரை ஏளனம் செய்து பேசலானார்கள். இதனைப் பொறுமையற்ற பீஷ்மர் அவர்கட்கு தக்க பாடம் புகட்ட எண்ணினார். அதன்படி மன்னர்களை நோக்கி ''மன்னர்களே, அம்பை, அம்பிகை, அம்பாலிகை என்னும் காசி மன்னனின் புதல்வியர் மூவரையும் நான் வலிதில் கவர்ந்து செல்லப் போகிறேன். உங்களால் இயலுமாயின் என்னுடன் போரிட்டு அதனைத் தடுக்க முடியுமா'' எனக் கூறி புதல்வியர் மூவரையும் கவர்ந்து தம் தேரில் ஏற்றிச் செல்லலானார். மன்னர்கள் எல்லோரும் வெகுண்டெழுந்து ஒன்றுகூடி பீஷ்மருடன் போர் புரியலானார்கள். பீஷ்மரை எதிர்த்து போரிட முடியாது மன்னர்கள் அனைவரும் பின்வாங்கி விட்டனர். சாலுவ மன்னன் மட்டும் பீஷ்மரை நெடுந்தொலைவு பின்தொடர்ந்து போரிட்டும் பீஷ்மரை எதிர்க்க முடியாது அவனும் திரும்பி விட்டான். பீஷ்மர் மங்கையர் மூவருடனும் அஸ்தினாபுரத்தை அடைந்து கன்னியர் மூவரையும் அன்னை சத்தியவதியிடம் ஒப்படைத்தார்.

பெண்கள் மூவரையும் தனது தம்பிக்கு வேதவிதிப்படி திருமணம் செய்ய ஏற்பாடுகளில் முனைந்தார் பீஷ்மர். அப்போது அப் பெண்களில் மூத்தவளாகிய அம்பை என்பாள் பீஷ்மரை நோக்கிப் ''பெரியீர், எனது மனம் சாலுவ மன்னனை விரும்புகிறது. அவரும் என்னை நேசித்தார். இதனால் தான் அவர் நெடுந் தொலைவு தங்களைத் தொடர்ந்து வந்து போரிட்டார். தர்மம் அறிந்த தாங்கள் எனக்கு உதவவேண்டும் என்று வேண்டி நின்றாள். இவ்வார்த்தைகளைச் செவியுற்ற பீஷ்மர், பிராமணர் உத்தமர்களைக் கலந்து உரையாடி, அம்பையை சாலுவ மன்னனிடம் அனுப்பி வைத்தார். அம்பையை அனுப்பியபின் அம்பிகை, அம்பாலிகை என்னும் இரு பெண்களையும் தம் சோதரனுக்குத் திருமணம் செய்து வைத்தார்.

அம்பை தன் தோழியருடன் சாலுவ மன்னனிடம் சென்றாள். மன்னனிடம் நடந்தவற்றை எடுத்துக்கூறித் தன்னை மணந்து கொள்ளும் படி வேண்டினாள். அப்போது சாலுவ மன்னன் அம்பையை நோக்கிப் ''பெண்ணே பல மன்னர்கள் முன்னிலையிலும் பீஷ்மர் உன்னைக் கவர்ந்து சென்றார். பிற ஆடவன் ஒருவன் கவர்ந்து சென்று அவனின் வீட்டில் தங்கியிருந்து திரும்பியுள்ள உன்னை 'நான் மணம் செய்ய முடியாது' அவ்விதம் நான் உன்னை மணம் புரிவேனாயின் மன்னர்கள் என்னைப் பரிகசிப்பர்'' என்று கூறி, அம்பையைப் பீஷ்மரிடம் செல்லுமாறு பணித்தான்.

அம்பை பீஷ்மரிடம் திரும்பிச் சென்றாள். சாலுவ மன்னன் தன்னை நிராகரித்து விட்டமையைக் கூறி தன்னை பீஷ்மரே மணம் முடிக்க வேண்டும் என்று வேண்டினாள். அப்போது பீஷ்மர், பெண்ணே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் செய்து கொடுத்துள்ள சத்தியத்தில் இருந்து தவறமாட்டேன். உன்மனம் சாளுவ மன்னனையே விரும்பியது. எனவே நீ சாளுவ மன்னனிடமே செல்" என்று கூறி அம்பையை மீண்டும் சாளுவ மன்னனிடம் அனுப்பி வைத்தார். ஆனால் சாளுவ மன்னனோ அம்பையை ஏற்கவில்லை. இதனால் பெரும் அவமதிப்புக்குள்ளான அம்பை பீஷ்மர் மீது கடும் சினம் கொண்டு அவரைக் கொல்ல உறுதி பூண்டாள். நன்கு சிந்தித்து, தவம் செய்ய முனைந்தாள். பாகுதா என்னும் நதிதீரத்தில் கடும் தவம் புரியலானாள். அம்பையின் தவ வலிமையைக் கண்ணுற்ற தேவர்கள் அஞ்சினர். அவளின் கடும் தவத்திற்கு அருள்புரிந்த ஆறுமுகப் பெருமானார் அவளுக்குக் காட்சி கொடுத்து பெண்ணே இதோ தேவலோகத் தாமரை மலரால் ஆன மாலையை உனக்குத் தருகிறேன் இம்மாலையை அணிபவர் பீஷ்மரைக் கொல்லும் வல்லமை பெறுவர் என்று அருளினார். தாமரைமலர் மாலையைப் பெற்ற அம்பை மகிழ்வுடன் மன்னர்களை நோக்கி சென்றாள்

மன்னர்கள் பலரிடமும் மாலையின் வரலாற்றைக் கூறி அம்மாலையை ஏற்றுத் தனக்கு உதவும்படி வேண்டினாள். பீஷ்மரின் ஆற்றலை அறிந்திருந்த மன்னர்கள் ஒருவருமே அவளின் வேண்டுகோளை ஏற்கவில்லை. இதனால் பெரும் சினம் கொண்ட அம்பை முடிவில் துருபதமன்னனை அடைந்தாள். பேராற்றல் மிக்க பீஷ்மருடன் தான் பகை கொள்ள விரும்பவில்லை என்று கூறித் துருபத மன்னனும் அம்பையின் வேண்டுகோளை நிராகரித்துவிட்டான். பெரும் வீரனாகிய துருபத மன்னனும் தன்னைக் கைவிட்டமையால் மனக்கொதிப்படைந்த அம்பை முருகப்பெருமான் கொடுத்த அம்மலர்மாலையைத் துருபதமன்னனின் அரண்மனை வாயிலில் தொங்கவிட்டுச் சென்றாள். இதனால் துருபதமன்னன் பெருங் கலக்கமுற்றான்.

மன்னர்கள் தனக்கு உதவாமையால் அம்பை தபோதனர்களை அணுகித் தன் செயலை முடிக்க எண்ணினாள். சிறந்த வீரரான பரசுராமரை அணுகித் தன் வேண்டுதலைக்கூறி நின்றாள். பெண்ணிற்கு இரங்கிய பரசுராமரும் பீஷ்மருடன் போரிடச் சம்மதித்தார். போர் தொடங்கி மூன்று ஆண்டுகள் வரை நடைபெற்றது. பீஷ்மரும் பரசுராமரும் வீரத்திலும், தவத்திலும் ஒத்தவர்களானமையால் யுத்தம் முடிவின்றி நடந்து கொண்டிருந்தது. பரசுராமர், பீஷ்மரை வெல்லமுடியாது என்று அவ்வெப்போரைக் கைவிட்டார். இவ்வழியிலும் தனக்குத் தோல்வி கிடைத்ததைக் கண்ணுற்று அம்பை மிகச்சினத்துடன் இருந்துவரலானாள்.

பரம்பொருளின் துணையே தனக்கு வெற்றி தரும் என்று துணிந்து அம்பை மேலும் தவம் செய்ய முனைந்தாள். தவத்தின் மேன்மையால் சிவபிரான் அவளுக்கு காட்சிகொடுத்தார். பெண்ணே நீ மறுபிறப்பொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவாய் அப்பிறப்பில் பீஷ்மரைக் கொல்வாய்'' என்று வரம்தந்து மறைந்தருளினார். பீஷ்மரைக்கொல்லவேண்டும் என்ற வஞ்சினம்' அறிந்த உத்வேகத்தினால் விரைவில் மறுபிறப்பை அடைய முயன்ற அம்பை சிதை அடுக்கித் தீமூட்டி அதிற்பாய்ந்து தன் உயிரைநீத்தாள்.

இவ்வண்ணம் உயிர் நீத்த அம்பை துருபத மன்னனின் மகளாய்ப் பிறந்தாள். மன்னன் அக்குழந்தைக்கு சிகண்டினி என்னும் நாமம் சூட்டி வளர்த்து வந்தான். சிகண்டினி வளர்ந்து தக்கதோர் பருவமடைந்த வேளை அரண்மனை முகப்பில் தொங்க விடப்பட்ட மாலையை விளையாட்டாக எடுத்து அணிந்து கொண்டாள். இதனால் அவள் உள்ளத்தில் பீஷ்மர் மீது வஞ்சினம் மூண்டு அவரைக் கொல்லும் மனம் பெற்றாள். மாலையைத் தன் மகள் அணிந்ததனைக் கண்ட துருபத மன்னன் அனுமதிக்குற்றமையாய்க் கலவரமடைந்து, தனது மகளைக் காட்டிற்கு அனுப்பி விட்டான்.

காட்டிற்கு வந்தடைந்த சிகண்டினி ஓர் ரிஷியை அணுகி அவருக்குப் பணிவிடை செய்து வாழ்ந்து வரலானாள். அவள் மனதில் பீஷ்மரைக் கொல்லும் எண்ணம் மேல் மேலும் வலுப் பெற்றது. இதனால் அவள் முனிவரிடம் அதற்கு வழியாது என வினாவினாள். இதனால் அம் முனிவரும் "பெண்ணே! கங்கை நதி உற்பத்தியாகும் இடத்தில் பெரும் விழா ஒன்று நடைபெற உள்ளது. அங்கு கந்தர்வர்கள் வருகை தருவர். அவர்களை அணுகினால் உனது எண்ணம் நிறைவேறும்" என்று வழி சொன்னார்.

இதன் பிரகாரம் சிகண்டினி அப்பெருவிழா நடக்கும் இடத்துக்கு விரைந்தாள். அங்கே கந்தர்வர்கள் வருகை புரிந்து இருப்பதைக் கண்ணுற்று அவர்களின் உதவியை நாடலானாள். அப்போது ஓர் கந்தர்வன் 'பெண்ணே உன் பெண் வடிவை மாற்றிக்கொள். அதன் மூலம் உன் எண்ணம் நிறைவேறும். அதற்கு நான் உதவி புரிவேன்' என்று கூறி சிகண்டினியின் பெண்ணுருவைத் தான் பெற்று தன் ஆணுருவை அவளுக்கு வழங்கினான். (அலிஉருவம் பெற்றாள் என்றும் கூறப்படுகிறது) இதன் வண்ணம் ஆண் உருவைப்பெற்ற சிகண்டினி, சிகண்டியாகத் தன் தந்தையின் நாட்டை அடைந்தாள். அஸ்திரப் பயிற்சிகள் போர்க்கலை என்பன பயின்று பீஷ்மரைக் கொல்லும் காலத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தாள்.......

தொடரும்


தலைவர்
வலிவடக்கு பிரதேச சபை
காங்கேசன் துறை
( மல்லாகம் )

சைவவித்துவாரிதி
சிவத்திரு வ. குமாரசாமிஐயர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி முருகன்மேல்
## பாடிய பாடல்கள்

இராகம்: ரஞ்சனி | தாளம் : ஆதி

பல்லவி

முருகனைப் பாடி மனமே - தினமே
முருகனைப் பணி மனமே - செல்வச்சந்நிதி (முரு)

அநுபல்லவி

திருவடி நாமனை நாடித் தேடிவரும் அடியவர்க்கு
அருள் மழை பொழிந்திடும் அம்பிகை பாலனை
ஆனைமுகன் - சோதரனை - அறுமுகனை (முரு)

சரணம்

தொண்டைமா னாற்றங்கரை அமர்ந்தவனை ஆதிரு
கோவணமுடைய அரசனைச் சண்முகனை
கண்கண்ட தெய்வமாம் காருண்ய சீலனைக்
கலியுக வரதனைக் கற்பக தருவினை
கந்தனைச் - சங்கரன் மைந்தனைக் - குகனை (முரு)

இராகம்: மோகனம் | தாளம் : ஆதி

பல்லவி

ஒருதரம் அழைத்தாலே போதும் - அவனை
ஒருதரம் அழைத்தாலே போதும் - மனங்கசிந்துருகி அவனை
ஒருதரம் அழைத்தாலே போதும் - செல்வச் சந்நிதியானை (ஒரு)

அநுபல்லவி

விரதங்கள் அனைத்தையும் புரிந்தாலும் வெற்றி
வேலவனை மனத்தில் எண்ணி மறந்துவிட்டால் என்ன பயன் (ஒரு)

சரணம்

பஞ்சமா பாதகங்கள் புரிந்தாலேனும்
பழிதரும் இழிதொழிலைப் படைத்தாரேனும்
தஞ்சமென்று அவன் பாதம் சரண் அடைந்தால்
நெஞ்சில் வந்து குடியிருப்பான் நினைத்தவுடன் காவலுக்குவான் (ஒரு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : சுருட்டி　　　　　　　　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

சந்நிதி வேலவன் புகழ் பாடித் துதித்தால்
சஞ்சலம் நீங்கி மனச் சாந்தி அடைந்திடலாம்　　　　( சந் )

அநுபல்லவி

மன்னிறு தோளுடையான் பார்வதித் தாய் பெற்றெடுத்த
கண்ணாளனாய் வந்த சந்நிதிக்கோவில் செல்வச்　　　　( சந் )

சரணம்

சேவற் கொடி அழகன் சேவடி பணிந்து நின்றால்
வென்றிடும் பாவவினை இவ்வுலகில் சருகாக
காவடி தூக்கி விலகாத தூரம் நடந்து
காலடிதனைப் பணிந்து நின்றால்
கஷ்டங்கள் தீர்க்கும் - செல்வச்　　　　( சந் )

இராகம் : சிந்துபைரவி　　　　　　　　　　　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

சந்நிதியான் தாள்பிடித்த சந்தோஷமே மனமே
உன்னிடத்தே குடிபுகுந்த உத்தமனும் அவனன்றோ　　　　( சந் )

அநுபல்லவி

வண்ணமயில் மீதில் வரும் வடிவேலன் மால்மருகன்
கண்ணெதிரில் வந்து நின்று காட்சி தரும் கந்தன் செல்வ　　　　( சந் )

சரணம்

ஞானப்பழம் கொடுக்கட்டவே வெறுத்தான் - ஔவையிடம்
சுட்ட பழம் கேட்டு நல்ல பாடம் கொடுத்தான்
முருகன் கொண்ட வேடன் வடிவெடுத்தே - வள்ளி
நாயகியைக் கரம் பிடித்தே மணம் முடித்தான் செல்வ　　　　( சந் )

திரு. சி. ஆனந்தகுமாரசா
ஓய்வு பெற்ற ஆசிரியர்
உடுப்பிட்டி

ஒருவருக்கு வேண்டுவது எல்லாம் இறைவனது அருளே.
ஒருவர் அதற்காகவே பிரார்த்தனை செய்ய வேண்டும்.
— ஸ்ரீ சாரதாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் கண்ட கால்வாய்

அடியார் பாதநூனி என்ற ஒரு சிறந்த பக்தர். ஆண்டவன் வழிபாட்டை விட, அடியார்கள் வழிபாடே சாலச் சிறந்தது என்று உறுதியாக நம்பினார். அவர் ஒருநாள் வழக்கம் போல் பக்தர்கள் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒருவர் எழுந்து- ''பாதநூனி அவர்களே! ஆண்டவனை நேரடியாக அர்ச்சித்து அவன் அருளைப் பெறுவதைவிட அவன் அடியார்களை வணங்கி வழிபடுவதால் இறைவன் அருளை மிக எளிதிலே பெறமுடியும் என்று நாங்கள் கூறுவது எவ்வாறு பொருந்தும்?'' என்றார்.

அதனைக் கேட்ட பாதநூனி அதற்கு விளக்கமாக கதை ஒன்று கூறினார். ஒரு சின்னஞ்சிறிய கால்வாய் இருந்தது. அது கடலைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று வெகு காலமாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் அதனிடம் அப்பொழுது சிறிது தண்ணீர்தான் இருந்தது. அதனால் சிறிது தொலைவு சென்றதுமே வற்றி விட்டது. அதனால் ஏமாற்றம் அடைந்தது.

இப்படியே பல முறையும் சென்று பாதி வழியிலேயே வற்றி வற்றி நின்றது. ''இனி மேல் கடலைச் சென்று காணும் வாய்ப்பே கிடைக்காதா? கடைசிவரையில் கடலைச் சென்று அடைய முடியாமலே வற்றி மாண்டு விடுவதுதான் நேருமோ'' என மிகவும் வருந்தி நம்பிக்கையும் இழக்கத் தொடங்கியது.

அந்தச் சமயத்திலே கால்வாயின் நண்பனான கரிய மேகம் அதனிடம் வந்து ''நண்பா! நீ மிகவும் சிறியவன். அதனால், உன்னைப் பெரிய தூரம் கடலைச் சென்று அடையும் ஒரு நதியுடன் சேர்ந்து கொண்டு சென்றால் மிக விரைவிலே, எளிதிலே எவ்விதச் சிரமமும் இல்லாமல் கடலைச் சென்று அடையலாம்'' என்று உபதேசித்து விட்டுச் சென்றது.

மழைமேக நண்பனின் உபதேசப்படியே தன் அருகில் இருந்த பெரிய காவிரி நதியுடன் சேர்ந்து புறப்பட்டது. அதனால் எவ்விதச் சிரமமும் இல்லாமல் மிக விரைவிலேயே கடலை அடைந்து, மகிழ்ந்து விரும்பிய பயனைப் பெற்றது என்று அடியார் பாதநூனி கதையை முடித்து விட்டுக் கூட்டத்தினரை நோக்கினார்.

இக்கதையில் இருந்து கடல் என்பது இறைவன்; கால்வாய் என்பது இறைவனை அடைய விரும்பும் மக்கள், காவிரிநதி என்பது இறைவன் அருள் பெற்ற அடியார்கள்! ஆகையால் இறைவனை நாம் அடைவதற்கு இறைவன் அருள் பெற்ற அடியவர்களை மதித்து வணங்குவோமாக.

தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருங்காயம் வேண்டாம்
# சீரகந்தான் வேண்டும்

முருகனுக்குச் செட்டி என்பதும் ஒரு பெயர். முருகனும் சிரேஷ்டமானவன். செட்டியானவன். 'தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளே!' என்று அவனுடைய சிரேஷ்டத்தை உணர்த்துகிறார் அருணகிரியார்.

'செட்டியப்பனை' என்று பெருமானைச் சுந்தரமூர்த்தி நாயனார் பாடுகையில் முருகனைச் செட்டி என்று குறிக்கிறார். திருப்புகழில் "செட்டி எனுமியோர் திரு நாமங்களை" என்று வருகின்றது.

முருகனைச் செட்டியென்று வழங்கும் வழக்கை வைத்துக் கொண்டு ஒரு புலவர் வேடிக்கையாக ஒரு பாட்டுப் பாடுகின்றார். முருகப்ப செட்டியாரிடம் வியாபாரம் செய்கிறவராக நின்று அவர் "இன்ன சரக்கு வேண்டாம், இது வேண்டும்" என்று கேட்கிறார். செட்டியார் திருவேரகமாகிய சுவாமி மலையில் கடை வைத்திருக்கிறவர். அது ஆறுபடை வீடுகளில் ஒன்று அல்லவா!

"ஏரகத்துச் செட்டியாரே!" என்று அழைத்துத் தம் விருப்பத்தை வெளியிடுகிறார் புலவர். "செட்டியாரே, வெங்காயக் குழம்பு வைக்கலாமென்று வெங்காயமும் வெந்தயமும் வாங்கிக் கொண்டு போனேன். கவனக் குறைவினால் வெங்காயம் இருப்பதையே மறந்து விட்டேன். அது இப்போது வற்றி உலர்ந்து சுக்காகப் போய் விட்டது. எதற்கும் பயன் இல்லாமற் போயிற்று. வெறும் வெந்தயத்தை வைத்துக் கொண்டு நான் என்ன செய்யப் போகின்றேன்? காய்ந்து போன வெங்காயத்தை வீணே சுமந்து கொண்டிருப்பதில்தான் என்ன பயன்?"

"குழம்புக்குப் போட பெருங்காயம் கூட வாங்கவேண்டுமென்று எண்ணினேன். இப்போது அந்த எண்ணம் எல்லாம் போய் விட்டது. வெங்காயம், வெந்தயம், பெருங்காயம் ஒன்றுமே வேண்டாம். வெங்காயம் விரதத்துக்கு ஆகாது. வெறும் சீரக ரசம் பண்ணிச் சாப்பிடலாமென்று தோன்றி விட்டது. ஆகையால் சீரகம் தாரும். மற்றது ஒன்றும் வேண்டாம்" என்று ஏரகத்து முருகப்ப செட்டியாரிடம் சொல்கிறார்.

வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன?
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை? - மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் வேண்டேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு செட்டியாருக்குப் பொருத்தமாக இருக்கிறதல்லவா? இப் பாட்டை மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் வெங்காயக் குழம்பு வேண்டாது சாது ஒருவன் சீரகத்தை விரும்பிச் சீரகம் கேட்பது போலத் தோன்றுகின்றது. அது வெளிப்படையான பொருள். உண்மைப் பொருள் வேறு உண்டு. ஆனால் அடியவர் ஒருவர் முருகனிடம் எதைக் கேட்டாரோ அதைக் கேட்பதாக அமைந்திருக்கின்றது.

உடம்புக்குக் காயம் என்று பெயர். இது பல நோய்களுக்கு இடமாக இருப்பது. வெப்பம் உள்ளது. ஆகவே இதுவே வெங்காயம். பலபல உறுப்புக்களை உடைய பெரிய இயந்திரம் இது. இதுவே பெருங்காயமாகவும் (உடம்பாகவும்) இருக்கின்றது. வெறும் காயத்துக்கு மதிப்பு இல்லை. இதனோடே உயிரோட்டம் இருந்தால்தான் மதிப்பு. உயிரில்லாமல் இது உலர்ந்து போனால் இதையாரும் தொடமாட்டார்கள். பயன் இல்லாத சரக்காகிய இந்த உடம்பைச் சுமந்து திரிவதை ஞானிகள் விரும்பமாட்டார்கள். உயிர் பழவினையின் பயனை அனுபவிக்க வந்து தங்கும் குடிசை இது. நிரந்தரமாக உள்ள சிறந்த மோட்சமோ உயிர் இன்பம்பெறும் இல்லம்; சிறந்த வீடு; சீர் அகம். அந்தச் சீரகத்தை இறைவன் அருளினால் மறுபடியும் இந்தப் பெரிய காயத்தில் உயிர் வந்து புகவேண்டிய அவசியம் இல்லை. இந்த அழகிய கருத்தை அந்தப் பாட்டு சொல்கிறது.

★★★

ந. சிவபாதம் (புத்தொளி)
ஆனைக்கோட்டை

தற்கால உலகில் பலரும் பணத்தை மட்டும் தேடுவதிலேயே அதிக கவனம் செலுத்துகின்றனர். பணம் வாழ்க்கைக்குத் தேவையான எல்லா நிறைவுகளையும் கொடுக்கமாட்டாது. பணத்தினால் வசதிகளை மட்டும் நாம் பெற்றுக் கொள்ளலாம். மனிதனுக்கு மிகவும் அவசியமான நிம்மதியை அது தருவதில்லை.

மயில்வாகன சுவாமிகளின் குருபூசைத்தினத்தில்
திருமதி மங்கையற்கரசி சிற்றம்பலம் ஆற்றிய உரையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி இலையின் மகத்துவம்

நீர் வளமும் நில வளமும் செறிந்து காணப்படுகின்ற விதர்ப்ப நாட்டிலே ஆதேயம் என்ற ஒரு நகரம் இருந்தது. அந் நகரத்தில் வீமன் எனும் பெயருடைய வேடன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகக் கொடியவன். வழிப்போக்கர்களை வழி மறித்து பொன்னும் பொருளும் அபகரித்து வந்தான். ஒரு முறை சில அந்தணர்கள் திருவிழாவைக் கண்டு களித்துவிட்டு மனமகிழ்ச்சியோடு தங்கள் இல்லத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். வீமன் அவர்களைக்கொன்று அவர்களிடமிருந்து பொருட்களை எல்லாம் கொள்ளையடித்தான். அக்கணமே வீமனை பிரமகத்தி தோஷம் பற்றிக் கொண்டது. அதன் காரணமாக அவன் செய்த பாவம் ஒன்று திரண்டு ஒரு கொடிய அரக்கனாக உருக்கொண்டு அவன் எதிரிலே வந்து நின்றது. அரக்கன் வீமனைப் பார்த்து சிங்கம் போல் கர்ஜித்தான். அவ் அரக்கனைக் கண்டு வீமன் நடுங்கினான். செய்வதறியாது திகைத்தான். பயத்தால் ஓடத்தொடங்கினான். அரக்கனும் வீமனைத் துரத்தலானான். வீமன் ஓடி ஓடி ஒரு தூரத்திலிருந்த வன்னி மரத்தின் மீது வேகமாக ஏறினான். அவன் மரத்தின் மீது ஏறிய வேகத்தில் ஏற்பட்ட சலசலப்பினால் வன்னி இலை ஒன்று மரத்திலிருந்து உதிர்ந்தது. அம் மரத்தடியிலிருந்த விநாயகப் பெருமானின் விக்கிரகத்தின் மீது விழுந்தது. இதற்குள் அரக்கனும் வீமனைத் துரத்திக் கொண்டு வந்து மரத்தில் ஏறினான். அவனது அசைவுபட்டு மற்றொரு வன்னி இலை உதிர்ந்தது. விநாயகப் பெருமானின் திருவடியில் வந்து விழுந்தது.

மரத்தின் மீது ஏறி விட்ட அரக்கனுக்கும் வேடனுக்கும் பயங்கரமான சண்டை மூண்டது இருவரும் மரத்தின் மீது இருந்தவாறு இலைகளை ஒடித்து அடித்துக் கொள்ளலாயினர்.

இதனால் வன்னி மரத்தில் உள்ள இலைகள் அனைத்தும் இவர்களால் உதிர்ந்து விநாயகர் மீது விழுந்தவண்ணமாகவே இருந்தன.

விண்ணவர் கற்பக மலர்களால் பெருமானை அர்ச்சிப்பது போல் இவர்கள் இருவரும் வன்னி இலைகளை உதிர்த்துக் கொண்டிருந்தனர். இருவரும் மரத்திலிருந்து உருண்டு வீழ்ந்து விநாயகப் பெருமானின் திருவடியில் உயிரை இழந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் உதிர்த்துவிடப்பட்ட வன்னி இலைகளை விநாயகப் பெருமான் கடாக்ஷத்து உகந்த ஆராதனையாக ஏற்றுக்கொண்டார். அவர்கள் இருவரும் எண்ணற்ற தீவினைகளைச் செய்துகொண்ட போதும் வன்னி மரத்து விநாயகரின் திருவருளால் தீவினை நீங்கி தெய்வஉடல் பெற்று எழுந்தனர். அப்பொழுது விண்ணிலிருந்து பொன் விமானம் ஒன்று வந்தது. அவ் விமானத்தில் வந்த தேவகணத்தவர்கள் இருவரையும் விமானத்தில் ஏற்றிக்கொண்டு விநாயகரின் பாதபத்மத்திற்குச் சென்றார்கள்.

விநாயகப் பெருமானுக்கு வன்னி இலையும், அறுகம்புல்லும் ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடிய பரிபூரண மலர்களாகும். வன்னி இலையால் விநாயகப் பெருமானைப் போற்றி அருளைப் பெறுவோமாக.

செ. செல்வரஞ்சனா
சன்னாகம் இறக்கு
மல்லாகம்.

## நாம் செய்ய வேண்டியது

இந்துமதமும் இறுக்கமான கட்டுப்பாடுகளையும் விதிமுறைகளையும் பெரிதாகக் கொண்டிருக்கவில்லை. ஆனால் மாதா, பிதா, குரு, தெய்வம் போற்றப் பெறுவதை எமது மதம் சிறப்பாகக் கொண்டுள்ளது. இந்த நான்கு அணிகலன்களையும் பேணிநின்று வாழ்ந்தால் நாங்கள் நிம்மதியாகவும், சிறப்பாகவும் வாழலாம். இன்று எம்மில் பலர் முதல் மூன்று நிலைகளையும் மறந்துவிட்டுத் தெய்வத்தை அடைய முயற்சி செய்கிறார்கள் இது தவறான கொள்கையாகும். முதல் மூன்று நிலைகளையும் மதிக்காதவர்களை இறைவன் நேசிக்க மாட்டான். ஆகவே மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற எல்லா நிலைகளிலும் நாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து அவர்களை மதித்து வழிபட்டு உயர வேண்டும். இவ்வாறு வாழ்வதன்மூலம் எமது வாழ்க்கை நிம்மதியான வாழ்க்கையாக அமைவதுடன் எமது சமயமும், பண்பாடும் பேணப்படுவதற்கும் அது காரணமாக விளங்கும்.

மயில்வாகன சுவாமிகளின் 13வது குருபூசைத் தினத்தில்
நல்லை ஆதீன முதல்வர் ஆற்றிய உரையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதி

எமது சமயத்தில் காலத்திற்குக் காலம் பல பக்தர்களும் சித்தர்களும் தோன்றி, மக்களின் துன்பங்களைப் போக்கி, அவர்களை நல்வழிப் படுத்தி, அவர்களின் ஆத்மீக வாழ்க்கைக்கும் வழிகாட்டியாக வாழ்ந்து சென்றுள்ளார்கள். இந்த வகையில் எமது சமகாலத்தில் வாழ்ந்து எமது கண்முன்னால் நடமாடி, மக்களது துன்பங்களைப் போக்கி நடமாடும் தெய்வமாக விளங்கியவர் தான் தவத்திரு முருகேசு சுவாமிகளாவார்.

முருகேசு சுவாமிகள் தன்னை நாடி வந்த அன்பர்களது துன்பங்களைப் போக்கி, அவர்களது வாழ்க்கையின் ஒளி விளக்காக இந்த மண்ணில் வாழ்ந்து சென்றுள்ளார் என்பதைப் பல அன்பர்கள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது. அத்தகைய அன்பர்களில் ஒருவர் தான் திரு. க. பரமலிங்கம்.

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு க. பரமலிங்கம் அவர்கள் தற்பொழுது ஜேர்மனியில் வசித்துக் கொண்டிருக்கிறார். இவர் தனது குழந்தைக்கு ''சந்நிதி'' எனப் பெயரிட்டுள்ளார். முருகேசு சுவாமிகளின் அருட் பார்வை கிடைக்கப்பெற்று, அவர் தமது வாழ்க்கைக்கு எவ்வாறு வழி காட்டியாக விளங்கினார் என்பதைக் குறிப்பிட்டு, திரு. பரமலிங்கம் அவர்கள் எழுதிய விபரத்தை அப்படியே இங்கே தருகின்றேன்.

''நான் ஒரு விவசாயி மகன். ஆரம்பத்தில் சாதாரணமாக இருந்தோம். 1977ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு கஷ்டம் சொல்லமுடியாது. பள்ளத்தில் பயிர் இட்டால் வெள்ளம். பிட்டியிற் பயிர் இட்டால் வரட்சி. செய்தொழில்பலன் இராது. 1978 ஆம் ஆண்டு மட்டும் 40 பவுண் நகையை இழந்தேன். கஷ்டத்தைச் சமாளிக்க முடியாததைக் கண்ட எனது சிறிய தந்தையும் மாமி அவர்களும் எமது ஐயா முருகேசு சுவாமிகள் அவர்களின் பார்வையை எங்கள் பக்கம் திருப்பினார்கள். இவரின் பார்வையும் திருவடியும் எங்கள் வீட்டிற்பட்டதும் வறுமை மறையத் தொடங்கியது. எங்களுக்குக் கிரக நிலைகள் சாதகமாக இருக்கின்ற காலத்தில் வீட்டுப்பக்கம் வரமாட்டார். கிரக நிலைகள் சாதகமில்லாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் தானாகவே வீடுதேடி வந்து முருகனுக்கு அனைத்துப் பூசைகளும் செய்து கிரகசாந்தி செய்து, கிரக பலன்களை சாதகமாக்கி சந்நிதிப் பெருமானின் திருவருட் கடாட்சத்தை எம்முள் இருத்துவார். கிரக பலன்கள் பாதகமான காலத்தில் எங்கும் போக விடமாட்டார் தொழில் செய்ய விடமாட்டார். தன்னுடனே இருக்கச் சொல்லி தனது செலவிலே எமது வாழ்க்கை ஓடியது. எமது இஷ்டப் படி ஏதும் செய்யவோ எங்கும் போகவோ விடமாட்டார். இதனால் சில சமயம் இத் தெய்வத்துடன் கதையாது வெறுப்பதுமாக இருப்பேன். காலம் வரும் வரட்டும் அதன்பின் உன்பாடு என்பார். 1981 தொடக்கம் 1983 வரை எனக்கு மிக பாதகமான காலமாக இருந்தது. எமது வீடு மாறி இருக்க வேண்டும் என்று கிரக நிலையால் அதன் படி செய்வித்தார். இந்தக் காலத்தில் 2 நிமிடம் கூட ஐயாவை பிரிந்தால் பிரச்சினை கெடுதல் தேடிவந்து விடும் இதை நானே உணர்ந்து கொண்டதால் அவரைப் பிரிவதே இல்லை. காலம் கூடும் வர வெளி நாடு போகின்றாயா என்று கேட்டார். எனக்கு விருப்பமில்லை காரணம் தாய் தகப்பன் சகோதரங்கட்கு உதவி இல்லை. தாய் அவர்கட்கும் என்னை விட விருப்பமில்லை. பாச வலையால் வறுமையில் வாடப் போகின்றோம் என்பதை உணர்ந்த ஐயா, தாய் தகப்பன் சகோதரங்களுடன் மனஸ்தாபங்கள் ஏற்பட சிறு பிரச்சனைகளையும் பெரிய பிரச்சினையாக விரிவு படுத்தி குற்றங்களை கண் முன் காட்டி எனது மனதை வயிரமாக்கினார். இதன் பின் வெளிநாடு போகின்றேன் என்று சொன்னேன். பிரயாணம் சுலபமாக இருக்க வேண்டுமென்பதற்காக சந்நிதியானுக்கு அன்னதானமும் அங்கப் பிரதட்சணையும் இதற்கு மேலாக நாவினால் கோவிலைச் சுற்றி அடியளிப்பும் செய்தார். எனக்காக அவர் நேர்த்திகள் விரதங்கள் யாவையும் தானே செய்து என்னை நலமாக வாழவைத்தார். இவர்களின் அருள் துணை ஆகியால் எந்தப் பிரச்சினை வந்தாலும் இடையூறு இன்றி நிம்மதியாக இருக்கின்றோம். நாடு சீர் அடைந்து நாம் நலமாக வாழ ஐயா அவர்களே துணைபுரிய வேண்டும்."

சமய குரவர்கள் போன்ற சமயப் பெரியார்களும் அருளாளர்களும் எமது சமயத்தில் காலத்திற்கு காலம் தோன்றி எமது மதம் எதிர் நோக்கிய நெருக்கடியிலிருந்து அவற்றை மீட்டது மட்டுமன்றி எமது சமயத்தின் சிறப்பையும் மேன்மையையும் வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை நாம் அறிகின்றோம். ஆனால் இவைகள் எல்லாம் உண்மைதானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எப்போதோ நடந்த சம்பவங்கள் என்றும் இவர் புறம் தள்ளுகின்றனர். மாற்று மதத்தவர்களின் பிரச்சாரத்தில் ஏமாந்தும், வேறு தேவைகளுக்காகவும் மதம் மாறுகின்ற நிகழ்வுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றுள்ளவர்களும் பலர் இவ்வாறு மாறிக் கொண்டிருப்பதனையும் பார்க்கின்றோம். ஆயினும் சம காலத்திலும் எமது சமயத்தில் மக்களது துன்பங்களைப் போக்குகின்ற முருகேசு சுவாமிகள் போன்ற அருளாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை மேற்படி திரு. க. பரமலிங்கம் அவர்களது அநுபவம் எமக்கு எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

த. அரியரத்தினம்
தொண்டைமானாறு

## மரணம்

வாழ்க்கையின் முடிவு மரணம் என்பது அனைவரும் அறிந்த விடயம். மரணம் என்பது ஜீவனைப் பொறுத்தவரையில் புதிய சக்தியும், உற்சாகமும் புது ஆற்றல் இறைமையும் உயிரில் உருவாகும் ஒரு புனிதமான நிகழ்ச்சி. பகல் முழுவதும் உழைத்துக் களைப்படைந்தவர்களுக்கு இரவு உறக்கம் களைத் தீர்த்துப் புத்துணர்வையும் தெம்பும் அளிப்பதுபோன்று, வாழ்நாள் முழுவதும் பல துறைகளிலும் செயலாற்றி வாழ்வில் களைப்படைந்த மனிதர்களுடைய ஜீவன் சுபாவமாகவே ஏற்றெடுத்த ஒரு தீர்க்ககால உறக்கம் அல்லது ஓய்வுதான் மரணம்.

சுவாமி கெங்காதரானந்தா
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியையும் வெல்லலாம்

முன்னொரு காலத்தில் அரசன் ஒருவன் வீரர்கள் சிலருடன் வேட்டையாடுவதற்காகக் காட்டிற்குச் சென்றான். வழியில் ஒரு மரத்திலிருந்த பறவை இறக்கைகளை அடித்துக் கொண்டு ஏதோ கத்தியது. உடனே அரசன் சகுனம் பார்ப்பதிலும் பறவைகளின் மொழி அறிவதிலும் தேர்ச்சி பெற்ற ஒருவனை அழைத்து "அந்தப் பறவை என்ன சொல்கிறது" என்று கேட்டான். அதற்கு அந்த வீரன் "அரசே! பறவை நம்மைப்பற்றி ஏதும் சொல்லவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் புல் வெட்டுவதற்காக இங்கு வரும் உழவன் ஒருவன் பாம்பு கடித்து இறந்து விடுவான் என்று சொன்னது" என்றான்.

அவன் சொல்லி வாய் மூடவில்லை கையில் புல் அறுக்கும் அரிவாளுடன் ஒருவன் அவ்வழியே சென்றான். அவனைக் கண்ட அரசன் பறவை சொன்னபடி நடக்கின்றதா என்பதை அறிய ஆவல் கொண்டான். அதனால் அவன் தன் வீரர்களுடன் அங்கேயே தங்கியிருந்தான். மாலை நேரமாயிற்று. தொலைவில் தலையில் புல் கட்டுடன் மெதுவாகத் திரும்பி வந்து கொண்டிருந்தான் அந்த உழவன். உடனே அரசன் சகுனம் சொன்ன வீரனைப் பார்த்து, "நீ சொன்னது என்னவாயிற்று? இவனைப் பாம்பு கடிக்க மறந்து விட்டதா? இவன் தான் எமனை ஏமாற்றி விட்டானா? இவன் எப்படிச் சாவிலிருந்து தப்பினான் என்பதை நீ எனக்கு விளக்க வேண்டும்" என்று கோபத்துடன் சொன்னான். "அரசே அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரவேண்டாம். அந்தப் பறவை சொன்னபடி தான் நடந்திருக்க வேண்டும். இடையில் என்ன நிகழ்ந்தது என்று புரியவில்லை" என்று சொன்னான்.

தங்களுக்கு அருகில் வந்த உழவனிடம் புல்லுக் கட்டை கீழே போடும்படி அரசன் சொன்னதும், உழவன் கீழே போட்டான். அதற்குள் பாம்பு ஒன்று அரிவாளால் வெட்டப்பட்டு இறந்து கிடந்தது. அதனைக் கண்ட அரசன் வியப்படைந்து வீரனைப் பார்த்தான். "அரசே! பாம்பு இவனைக் கொல்வதற்காக வந்திருக்கிறது. ஆனால் அது இறந்து விட்டது. என்ன காரணம் என்று தெரியவில்லை. எதற்கும் உழவனை விசாரிப்போம்" என்றான் வீரன்.

பின்பு உழவனைப் பார்த்து நீ புல் வெட்டும் பொழுது ஏதேனும் சம்பவம் நடந்ததா? எனக் கேட்டான். அதற்கு உழவன், "வழியில் ஒரு முதியவர் வந்தார். அவரை நான் வணங்கிய பொழுது "நீடூழி வாழ்க" என வாழ்த்தினார் அது தான் நடந்தது. அதைக் கேட்ட வீரன் "அரசே அந்த முதியவரின் வாழ்த்தினால்தான் அவன் சாவிலிருந்து தப்பி விட்டான். உயர்ந்த சான்றோர்களின் சொற்கள் பிரமன் எழுதிய தலை எழுத்தைக் கூட மாற்ற வல்லவை" என விளக்கம் தந்தான்.

தொகுப்பு: சின்ன நன்னெறிக் கதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகனும் ஆறுபடை வீடுகளும்

எங்கும் ஏக உருவாய்ப் பொங்கித் ததும்பிப் பூரணமாய் விளங்கும் இறைவன் என்னும் இன்பக் கடலில் இருந்து வெளிப்பட்டது ஓர் இனிமையான அமிர்தம். இவ்வினிமையான அமிர்தமே ஆறுமுகங்களும் பன்னிருகைகளுமாய்த் திகழும் ஆறுமுகப் பரம்பொருள். பெயரிலேயே இனிமை குடி கொண்டுள்ளது. பெயரை நினைந்தாலும், கூறினாலும் உள்ளம் உருகும்.

ஆறுமுகப் பெருமானின் பெருமையையும் ஆறுபடை வீடுகளின் மகிமையையும் எடுத்தியம்புவது எளிதான காரியமன்று. ஆறுமுகப் பெருமானின் பெருமையை விளக்கும்போது திருமூலநாயனார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

" ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
யாரறி வார்இந்த அகலமும் நீளமும்
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதன்
வேரறி யாமை விளம்பு கின்றேனே "

ஆறு சமயங்களும் தானே என்று எமக்கு எடுத்தியம்பும் வகையில் ஆறு திருமுகங்களும் அடியார்க்கு அருளை அள்ளி வழங்குவதற்காகப் பன்னிருகைகளுமாக, குன்றாத இளமையும், மங்காத எழிலும் கொண்ட எம்பெருமான் குடியிருக்கும் முதற்படை வீடு திருப்பரங்குன்றம்

பாண்டிய நாட்டின் தலை நகராக விளங்கிய மதுரைக்குத் தென் மேற்கே ஐந்துமைல் (7km) தூரத்தில் அமைந்துள்ளது. இப்புண்ணிய ஸ்தலம் சூரபத்மன் முதலிய அசுரர்களை அழித்துத் தேவர்களின் துயர் துடைத்தமைக்குப் பிரதியுபகாரமாக இந்திரன் தன்புத்திரி தேவசேனையை முருகப்பெருமானுக்கு மணமுடித்து வைத்தது திருப்பரங் குன்றத்திலேயே என்று கூறுகின்றது கந்தபுராணம். ஆறுபடை வீடுகளை மக்களுக்கு அறிமுகப்படுத்திய நக்கீரனார் தமது திருமுருகாற்றுப்படை வெண்பாவில் திருப்பரங்குன்றத்தைப் பின்வருமாறு செப்புகின்றார்.

" பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு சுருங்காத
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல் "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுகக் கந்தனின் இரண்டாவதுபடை வீடாகத்திகழ்வது திருச்செந்தூர் அல்லது திருச்சீரலைவாய் எனப்படும் புண்ணிய பூமி. இது மன்னார்க் குடாக்கடலாற் சூழப்பெற்றது. ஓயாமல் கடலலைகளால் கழுவப்படுவதால் "அலைவாய்" என்ற காரணப் பெயருடன் விளங்குகின்றது. புராண வரலாறுகளின்படி, முருகப் பெருமான் சூரபத்மன்மீது படை எடுத்து வரும்போது வழியில் எதிர்ப்பட்ட தாரகாசுரனையும் அவனுக்குத் துணைநின்ற கிரௌஞ்ச மலையையும் சங்கரித்து விட்டுத் தம்படைகளுடன் திருச்செந்தூரில் வந்து இளைப்பாறியதாகக் கூறப்படுகின்றது.

"சிக்கலில் வேல் வாங்கி செந்தூரில் சூரசங்காரம்" என்பது பழமொழி. மாமரமாய் நின்ற சூரபத்மன் பிளவுபட்ட இடம் திருச்செந்தூரில் இருந்து 6 மைல் (8km) தூரத்திலுள்ள "மாப்பாடு" என்ற பிரதேசமாகும். இங்கு இன்றளவும் மாமரங்கள் தழைப்பதில்லை என்று கூறப்படுகின்றது. கச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகள் இதனைப் பின்வருமாறு சிறப்பித்துள்ளார்.

"பருமணி வயிரமுத்தும் பலவளம் ஆழித்
திரைஎறி அலைவாய் ஆகும் செந்திமாநகரம்"

செந்திலாண்டவனின் மகிமைமிக்க மூன்றாவது படைவீடாகத் திகழ்வது பழநி. இதனைத் திருவாவினன்குடி என்றும் அழைப்பர். பழநி என்பது மலையையும், மலையடிவாரத்தை உள்ளிட்ட பகுதியாகும்.

கயிலைப்பதியில் பார்வதி, பரமேஸ்வரன் மாங்கனிக்காக வைத்த போட்டியில் கணபதி வெற்றிபெற்றுக் கனியைப் பெறுகின்றார். தோல்வியுற்ற கந்தனோ கோபங் கொண்டு கயிலையைத்துறந்து பழநியில் கோவணாண்டியாகத் தங்கியதாகப் புராணங்கள் பகருகின்றன.

பிரிவுத் துயர் தாங்காது பார்வதி பரமசிவன் முருகனைப் பின் தொடர்ந்து திருவாவினன்குடி வந்து வேதங்கள் கூறும் "ஞானப் பழம் நீ" உனக்கு வேறு பழம் வேண்டுமோ? என்று ஆறுதல் அளித்தனர். பழம் நீ என்று முருகனுக்குச் சூட்டிய திருப்பெயரே நாளடைவில் "பழனி" என்று அவ்விடத்திற்குப் பெயராக அமைந்து விட்டது. பழநி மலையை அருணகிரிநாத சுவாமிகள் பின்வருமாறு பாடுகின்றார்.

மயிலை கற்பகாடவி அரியாகி சுற்று பூவுகிர்
பழநி மலைக்குள் மேவிய பெருமானே"

கார்த்திகேயனின் நான்காவது படைவீடு திருவேரகம் எனப்படும், சுவாமிமலை இது தஞ்சாவூர் ஜில்லாவில் கும்பகோணத்திலிருந்து சுமார் ஐந்துமைல் ( 7km ) தொலைவில் அமைந்துள்ளது. கயிலையில் ஒருநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமாதரன் என்ற அகந்தையுடன் முருகனை, பாலகன் தானே என்றெண்ணி வணங்காமற் சென்றார். பிரமாவின் செருக்கை அடக்கவும் உலகத்திற்குச் சிறந்ததொரு நீதியை விளக்கவும் எண்ணிப் பிரமனை அழைத்து வேதத்தை ஓதும்படி பணித்தார். பிரமா "ஓம்" என்று தொடங்கி வேதத்தை ஓதத் தொடங்கிய போது முருகன் அதை இடையில் நிறுத்தி "ஓம்" எனும் சொல்லிற்குப் பொருள் கூறுமாறு பணித்தார். பிரமா பொருள்கூற விளங்காது தடுமாறினார். பிரணவத்தின் பொருளறியாது படைக்கும் தொழில் புரிவது தவறு என்றுணர்ந்த முருகப் பெருமான் அவரது நான்கு சிரங்களும் கலங்குமாறு குட்டி அவரைச் சிறை வைத்தார். பின்பு தேவர்களின் வேண்டுகோளிற்கிணங்க சிவபெருமான் பிரமாவைச் சிறை விடுக்கும்படி முருகப் பெருமானுக்குப் பணித்தார். முருகனும் அவ்வாறே செய்தார். பிரணவத்தின் பொருள் முருகன் அறிந்திருந்தால் அதனைத் தனக்கு அருளுமாறு சிவன் கேட்க, முருகன் தன் தந்தையின் மடிமீதமர்ந்து குருமூர்த்தியாகப் பிரணவத்தின் பொருளைச் சிவனின் திருச்செவியில் உபதேசித்த இடமே சுவாமிமலை எனும் திவ்வியஸ்தலம்.

தந்தைக்கு உபதேசித்த தலமதனை வணங்குவதற்கு மலையேறும் போது முதற்படியில் தேங்காயுடைத்துத் தீபாராதனை செய்தபின்பே மலையேறுதல் வேண்டும். கச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகள் திருவேரகத்தின் சிறப்பினைப் பின்வருமாறு விளக்குகின்றார்.

> "நீரகத் தேறுமை நினையும் அன்பினோர்
> பேரகந் தலமரும் பிறவி நீக்கிடும்
> தாரகத் துருவமாந் தலைமை எய்திய
> ஏரகத் தறுமுகன் அடிகள் போற்றுவாம்."

கலியுகவரதனின் திருப்படைகளில் ஐந்தாவதாக விளங்குவது குன்றுதோறாடல். இதனைக் கருளிமலை என்றும் கூறுவர்.

குன்றுதோறாடல் ஏனைய திருத்தலங்கள் போலல்லாது மலைகளையும் மலைசார்ந்த இடங்களையும் குறிக்கும். இதனைக் குறிஞ்சி என்றும் அழைப்பர். குறிஞ்சி நிலக் கடவுளாகவும் முருகனையே கொள்வர். மலைகளிடையே விளையாடுவது முருகனுக்கு மிகவும் விருப்பமான விளையாட்டு. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டே நக்கீரனார் மலைகள் எங்கெல்லாம் உளதோ அங்கெல்லாம் ஆலயம் இருந்தாலென்ன, இல்லாவிட்டால் என்ன கந்தன் வீற்றிருந்து அருளாட்சி செய்வான் என்கிறார். முருகப் பெருமானின் கருணைக்காக மக்கள் தம் குலக்கொடி வள்ளியைப் பெண் கொடுத்து மலைகள் எல்லாவற்றையும் சீதனமாகக் கொடுத்ததாகக் குற்றாலக் குறவஞ்சி நயம்பட உரைக்கின்றது. குன்றுதோறாடலின் மாட்சியை அருணகிரிநாத சுவாமிகள் கீழ்வருமாறு விபரிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' கும்பிட நாடி வாழ்வு தந்தவரோடு வீடு
கூண்டுறநோ நாட்டம் மேவு — பெருமாளே''

வடிவேலனின் ஆறாவது படை வீடாகத் திகழ்வது பழமுதிர்சோலை என்ற அழகர் கோயில். இது மதுரையில் இருந்து 12 மைல் தூரத்தில் இருக்கின்றது. முதிர்ந்த பழங்களுடைய சோலைகள் சூழ்ந்த மலை பழமுதிர்சோலை. ஔவைப்பாட்டிக்கு முதிர்ந்த நாவற்பழத்தை முருகப் பெருமான் அருளியதும் பழமுதிர் சோலையிலேயே. திருமாலிருஞ் சோலை மலையாகிய அழகர் கோயிலே பழமுதிர்சோலையாகவும் திகழ்ந்தது. மகாவிஷ்ணுவுக்கு அவரது மருகர் மலைமகளுமையவள் குமரனுக்கும் உரிய திருத்தலமாக விளங்கி சைவ ,வைஷ்ணவ ஒற்றுமையை நிலை பெறச் செய்தது என உறுதிப்படுத்தப்படுகின்றது. இயற்கை எழில் நிறை சோலைகள் சூழ்ந்த பழமுதிர்சோலையை கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் பின்வருமாறு பாடுகின்றார்:

''பழமுதிர் கனியென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையும் பலவர் போற்றுமால்''

சிவஞானமுனிவரும் ,, சச்சிதானந்தன்'' என்ற பெயரில் ''சத்'' என்ற சொல் சங்கரனையும் ,,சித்'' என்ற சொல் ஆதிபராசக்தியையும் ஆனந்தம் என்ற சொல் முருகப்பெருமானையும் குறிக்கும் என்பர்.

இவ்வாறாக, வள்ளி, தேவசேனை சமேதராக வீற்றிருக்கும் சுப்பிர மணியன் , ஆறுபடை வீடுகளிலமர்ந்து' தனது வேலும் மயிலும் துணை கொண்டு வேண்டியவர்க்கு வேண்டியவற்றை வாரிவழங்குகின்றான். வேலையனின் தாள் பணிந்து பரவுவோமாக;

'' வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை''

ஆக்கம்: செல்வி. ஆ. அருள்மொழி

மகானுக்கும் சாதாரண மனிதனுக்கும் இடையே உள்ள வேற்றுமை இதுதான். மனிதன் உடலை விட்டுப் பிரியும் போது அழுகிறான். ஆனால் மகானோ சிரிக்கிறான். அவ னுக்குச் சாவு வெறும் விளையாட்டே.

—ஸ்ரீசாரதாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு கூறுதுமே

ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்னும் இருவகையாப் பாடல்கள் காணப்படுகின்றன. இவை சோழர் ஆட்சிக் காலத்தில் எழுந்த தோத்திர நூல்களாகும். திருவிசைப்பா இருபத்தெட்டு பதிகங்களையும் இருநூற்று எண்பத்தெட்டுப் பாடல்களையும் தன் அகத்தே கொண்ட நூலாகும். இதிலே பதினைந்து பதிகங்கள் சிதம்பரம் நடராஜப் பெருமான் மீது பாடப்பெற்றவை ஆகும். சைவர்களாகிய நாம் வணங்கும் திருத்தலங்கள் எல்லாம் கோயில் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்பட்டாலும் சிதம்பரம் நடராஜப்பெருமானது திருத்தலமே கோயில் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளது. சிவகாமி அம்மாள் சமேதராக தில்லை நடராஜன் ஆனந்தத் தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கும் திருத்தலம் இதுவாகும். நமது அருளாளர்கள் அனைவரும் இத்தலத்திற்குச் சென்று உள்ளம் உருகிப் பாடியுள்ளார்கள். திருவிசைப்பா பாடல்கள் அனைத்துக்கும் பண் வகுக்கப் பெற்றுள்ளது.

கண்டராதித்தர், திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பிகாட நம்பி, வேணாட்டடிகள், திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பது பேர் திருவிசைப்பா பாடல்களைப் பாடியுள்ளார்கள். சேந்தனார் பெருமான் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் பாடியுள்ளார். திருக்கோயில்களில் நடைபெறும் கிரியைகளில் தோத்திரம் பாடுதல் என்னும் நிகழ்வு ஒன்றும் இடம்பெறுகிறது. ஆகம முறைப்படி கிரியைகள் நடைபெறும் கோயில்களில் அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், வாழ்த்து என்ற ஒழுங்கில் கிரியைகள் நடைபெறும். தோத்திரம் பாடும் நிகழ்வுகளில் பஞ்சபுராணம் பாடுவதே மரபாகும். பஞ்சபுராணம் பாடும் போது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய ஐந்து திருமுறைகளில் இருந்தும் ஒவ்வொரு பாடல்களைப் பாடுவார்கள். கிரியைகளில் தோத்திரம் பாடும் பொழுது 8250 பாடல்கள் கொண்ட மூவர் தேவாரத்தில் ஒரு பாடலும், 656 பாடல்கள் கொண்ட திருவாசகத்தில் ஒரு பாடலும், 288 பாடல்கள் கொண்ட திருவிசைப்பாவில் ஒரு பாடலும் 13 பாடல்கள் கொண்ட திருப்பல்லாண்டில் ஒரு பாடலும் 4286 பாடல்கள் அடங்கிய பெரிய புராணத்தில் ஒரு பாடலும் பாடுவது வழக்கம் ஆகும். திராவிட வேதம் மருளிப் பாடுக என்ற ஆலயக் கிரியை நிகழ்வில் ஒன்பதாம் திருமுறையில் இரண்டு பாடல்கள் பாடப்பெறுவது சிறப்பானதோர் அம்சமாகும். ஆனால் நம்முடைய ஆலயங்கள் சிலவற்றில் வாழ்த்தும் முடிந்த பின்பே பஞ்சபுராணம் ஓதப்படுகிறது. இது ஆகமவிதிக்கு முரணான செயல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத் தமிழர்களுடைய வரலாற்றிலே பொற்காலமாகப் போற்றப்படுவது சோழர்காலம் ஆகும். சோழமன்னர்கள் கடல் கடந்த நாடுகளையும் கைப்பற்றி சோழப் பேரரசை அமைத்து ஆட்சி செய்து வந்தார்கள். சோழப் பெருமன்னர்களின் பெரும் புகழிற்கும் சிவபக்திக்கும் உதாரணமாகத் திகழும் கோயில்கள் தஞ்சைப் பெருவுடையார் கோயிலும் கங்கைகொண்ட சோழேஸ்வரமும் ஆகும். இராஜஇராஜனால் கட்டப்பெற்றது தஞ்சைப் பெருவுடையார் கோயில், அவனுடைய மகன் இராஜேந்திரனால் கட்டப்பெற்றது கங்கை கொண்ட சோழேஸ்வரம் ஆகும். இந்த இரண்டு தலங்கள் மீதும் திருவிசைப்பா பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. இராஜேந்திர சோழன் இலங்கை முழுவதையும் தனது ஆட்சிக்கு உட்படுத்தி பொலநறுவையை இராஜதானியாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். பொலநறுவைக்கு ஜனநாத மங்கலம் என்று பெயர் இடப்பட்டது. இந்த தனது தாயாரின் பெயரால் ''வானவன் மாதேவி சுவரம்'' என்ற சிவன் கோயிலையும் கட்டுவித்தான்.

திருவிசைப்பாவில் அதிகமான பாடல்களைப் பாடியவர் கருவூர்த் தேவர் ஆவார். இவர் அந்தணர் குலத்தைச் சேர்ந்த சித்த புருஷர் ஆவார். அட்டமாசித்திகளும் கைவரப் பெற்ற மெஞ்ஞானியாக இவர் திகழ்ந்தார். இவர் பாடிய பத்துத் திருப்பதிகங்களில் ஒரு பதிகம் கங்கைகொண்ட சோழேச்சரத் திருத்தலத்துக்கு உரியதாகும். இங்கே எழுந்தருளி திருவருள் புரியும் இறைவனின் பெயர் கங்கைகொண்ட சோழீச்சரர். இறைவியின் பெயர் பெரியநாயகி என்பனவாம். பஞ்சாட்சர மந்திரத்தை தனது நாவினால் நாள்தோறும் உச்சரிக்கும் அடியார்களுக்கு கங்கை கொண்ட சோழேஸ்வரத்தில் எழுந்தருளி இருக்கும் அற்புதத்தெய்வம் சகல உலகியல் செல்வங்களையும் வாரி வழங்குவான் என்பதை பின்வரும் திருவிசைப்பா பாடல் விளக்குகிறது.

அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டே
அன்பொடு தன்னையஞ்செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ள மள்ளூறுந்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன் மாளிகையும்
பவளவாயவர் பணைமுலையும்
கற்பகப் பொழிலு முழுதுமாங் கங்கை
கொண்ட சோளேச்சரத் தானே.

கண்டராதித்தர் இராஜஇராஜ சோழனின் சிறிய தந்தையாயிருந்தார். நீர் கலந்த பாலில் நீரை முதலில் ஆவியாதல் போல புண்ணிய பாவம் இரண்டினுள் பாவம் முதலில் நீங்கிவிடும் என்பதை ''பால்வளிய நறுங் காய் பாலனைய நீர் போல பாவமுண்டமைந்து'' என்ற தனது பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிகளின் ஊடாக விளக்குகிறார். திருச்சாட்டியக் குடி வாழ் இருக்கை இறைவனின் பெருமையை பின்வருமாறு தனது பாடலில் தெளிவாக விளக்குகிறார். இறைவனுக்கு மாலை பாம்பு, பாத்திரம் மண்டையோடு, ஊர்தி எருது, மஞ்சனம் அன்பரின் கண்ணீர். தேவியர் மலையரசனின் மடப்பாவை, இன்னிசை சாமவேதம், சடைமுடி, உறைவிடம் அடியார் உள்ளம் என்பதை அவரின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

பாந்தள் பூணாரம் பரிகலம் கபாலம்
பட்டவர்த்தனம் எருது அன்பர்
வார்ந்த கண் அருவி மஞ்சன சாலை
மலைமகள் மகிழ்பெரும் தேவி
சாந்தமும் திருநீறு அருமறை கீதம்
சடைமுடி சாட்டியக் குடியார்
ஏந்தெழில் இதயம் கோயில் மாளிகையேழ்
இருக்கையுள் இருந்த ஈசனுக்கே

திருமாளிகைத் தேவர் சிதம்பரத்தில் பெரிய மடம் அமைத்து தொண்டு புரிந்து வந்தார். இவர் வடமொழியிலும் புலமை மிக்கவராகையால் பாடல்களில் வடமொழிக் கலப்பு நிறைய உண்டு. இவர் சிவனை வணங்காதவர்களோடு நான் இணங்குவதில்லை என்றும் அவர்களைக் காண்பதில்லை என்றும் கூறுவார். சிவனுக்கு அன்பில்லாதவர்களை, துட்டர், பிணக்கர், பேயர், கள்ளர், கயவர், என்றெல்லாம் பேசுவார். சோழநாட்டின் அந்தணர் குலத்தில் தோன்றியவர் பூந்துருத்தி நம்பிகாடநம்பி ஆவார். இவர் மூவர் தேவாரங்களை ஓதும் வழக்கம் உடையவர். சிவனடியார் மீது நிறைந்த பக்தி கொண்டவர். இவர் சிற்றம்பலத்துக்கு முதற்பராந்தக சோழன் பொன் வேய்ந்தமையைக் குறித்து ''ஆடகப் பொன் வேய்ந்தமைந்த அம்பலம்'' என்று குறிப்பிடுகிறார். சோழ அரசராகிய கண்டராதித்தர் தனது நாளாந்த சிவ பூசையின் முடிவில் இறைவனின் திருச்சிலம்போசையை கேட்டு ஆனந்திக்கும் வழமையுடையவர். பாராளும் பெருமையிலும் பார்க்க பரம் பொருளின் புகழ் பாடுவது சிறப்புடையது என நினைத்து தனது அரச பதவியையே துறந்து விட்டு ஆலயங்கள் எல்லாம் சென்று இறைவன் புகழ் பாடினார்.

வேணாட்டடிகள் தனது பாடல்களில் பல உதாரணங்களைக் காட்டித் தனது அடிமை நிலையை விளக்குவார். ஒரு மாட்டுக்குப் புல்லும் ஒரு மாட்டுக்கு வைக்கோலும் இடுதல் போல அகத்திய முனிவருக்கு வேதங்களை உணர்த்தி விட்டு அடியேனைப் புறக்கணிக்கலாமா? என்று இறைவனைப் பார்த்து உரிமையோடு முறையிடுகிறார். திருவாலி அமுதனார் பிறப்பால் வைணவராயினும் தில்லைச் சிற்றம்பலமுடையார் மீது பக்தி பூண்டு சைவ சமயத்தவராகவே வாழ்ந்து வந்தார். இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிய நான்கு பதிகங்களில் முதற்பதிகம் பாதாதி கேசமாக இறைவனை வர்ணனை செய்து பாடப்பெற்றுள்ளது. இரண்டாம் பதிகம் நாயகன் நாயகி பாவத்தில் பாடப்பெற்றுள்ளது. மூன்றாம் பதிகத்தில் நடராஜனின் திருநடனச் சிறப்பு போற்றப்படுகிறது. நான்காவது பதிகமும் அகத்துறைப் பாடலாகவே அமைந்துள்ளது.

புருடோத்தம நம்பி பாடிய இரண்டு பதிகங்களும் அகத்துறையில் அமைந்துள்ளது. பாம்பும் மதியும் கொன்றையும் சூடி வந்தவரைக் கண்டுதான் காதலித்ததாகவும் வளையல்கள் கழன்று விழுந்தாலும் அவர் அருகில் நின்றால் போதும் என்ற நிலையில் தலைவி கூற்றாக வைத்து தனது பாடல்களைப் பாடியுள்ளார். சேதிராயர் என்பவர் சிற்றரசனாக இருந்தார். இவர் தில்லைச் சிற்றம்பலத்தின் மீது ஒரு பதிகம் பாடினார். சிவபெருமானைக் கண்டு காதல் கொண்டு வருந்தும் தன் மகளின் நிலைக்காகத் தாய் இரங்கும் தன்மையில் கொண்ட பாடல்கள் இவருடைய பாடல்களாகும்.

சேந்தனார் திருவிசைப்பா பதிகங்களில் மூன்றும் திருப்பல்லாண்டும் பாடினார். சிதம்பரத்தில் ஓடாது நின்ற தேரை ஓடச் செய்வதற்காக இவர் பாடிய பாடல்கள் திருப்பல்லாண்டு ஆகும். இப்பாடல்கள் இன்றும் இந்தோனீசியாவில் திருமண வீடுகளில் ஓதப்படுகிறது. இறைவனிடம் உள்ளம் உருகி வழிபடாதவர்கள் ஆலயத்தை விட்டு அகன்று விடுங்கள் என்பதை ''மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள் வஞ்சகர் போயகல'' என்று திருப்பல்லாண்டுப் பாடல் விளக்குகிறது. ஆலயம் அடியவர்களுக்கு உரிய இடமேயொழியக் கொடியவர்களுக்கு உரிய இடமில்லை என்பதையும், இறைவனை வணங்கி இறைவனின் திருவருளைப் பெறும் அடியவர்களுக்கு துன்பம் ஏதும் இல்லை என்பதையும் பின்வருமாறு திருப்பல்லாண்டுப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

மிண்டு மனத்தவர் போமின்கள்
    மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
    ஆட்செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள் அளவில்லதோர்
    ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருளென்றே
    பல்லாண்டு கூறுதுமே

தாய்லாந்தின் மன்னர்களின் முடிசூட்டு விழாவில் திருப்பல்லாண்டுப் பாடல் இன்றும் பாடப்படுகிறது. சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு பாடப்பெற்ற திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் சோழர் காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்களின் சிறப்பிடம் பெறும் பாடல்களாகும்.

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்
(விரிவுரையாளர் - பலாலி ஆசிரியர் கலாசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி முருகன்
## நவமணி மாலை

நாவாரப் பாடிடவும் ஏத்திடவும்
அடியார்கள் நாடி வந்தே
ஓயாது சந்நிதியுன் உபயபதம்
தொழுவார்கள் நிறைமை போமே
ஆவாவென் றடிபோற்ற மனநிலையு
முனைமறவா அன்பி னோடு
தேவாவென் றடிபணிவார் யாச்சிப்பேன்
எனைநோக்காய் தேவ தேவே.

வெற்றிவேல் கொண்டு சூரனையும்
கிளைஞரையும் வேரொ டட்டும்
பற்றியே புனைப்பலிய மடியாது
பாசமிலா மாற வைத்தாய்
சுற்றியே சந்நிதியான் கோயில்வலம்
வருவோர்க்கும் பேறுவைத்தாய்
வற்றிய புலவுமின்ற சமுதாயம்
வாழ்ந்திடவும் வகைசெய் வாயோ.

ஓதிய சந்நிதியில் ஒருமுருகா
திருக்கரத்தி லொளிவேல் தாங்கி
காதலுடன் வள்ளிதெய்வ யானையுடன்
மயிலேறிக் காட்சி தந்தே
போதுமின்றிச் சந்நிதியான் வாச்சியார்
பூசையுமி பொருந்த மாற்றி
மாதவத்தி னடியென்புனை நவமணிமா
லையுஞ்சூடி மகிழ்வாய் மன்னே.

குறிப்பு: வெண்பாப் பாட்டியலிற் கூறியபடி விருத்தப்பாவாற் பாடப் பெற்றது.
ஆடி மாத மலரில் வெளிவந்த "நவமணி மாலை பாடலும் புலவர் வை. க. சிற்றம்பலம் அவர்களாற் பாடப்பெற்றது.

புலவர் வை. க. சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easy way to Learn English

## PART - 8

### COMPREHENSION ( அறியும் ஆற்றல் )

Ravy was A young Medical student. He lived on the Campus of the Jaffna University. And was following a course of lecture at the Faculty of Medicine. Ravy had a Motor - Cycle. He enjoyed riding fast on it. He used to ride to Jaffna Hospital for his Practical work with the Patients there. One day Ravy was returning from the Hospital on his Motor - bicycle. He was riding very fast. There was a stationary lorry at the side of the road but Ravy did not notice it. When he saw the lorry, it was too late. He crashed headlong into it. When they picked him up, he was Dead.

I) **Fill in the blanks to from Questions from the above compreheusion passage**

(a) .................. was Ravy ?

(b) .................. did he live ?

(c) .................. did he go for his Practical work ?

(d) .................. did he travel to the hospital ?

(e) .................. hospital did he go ?

(f) .................. did he go there ?

(g) .................. Ravi notice the lorry ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II) Match the sentence parts

(a) If an elephant came into your room. (1) There will be on war.

(b) if the Sun did not rise (2) You will see yourself.

(c) if he had read the book. (3) We would run away.

(d) if you look in the mirror. (4) he would have known the story.

(g) if we live in Peace. (5) it would be dark.

III) Arrange the Jumdled to make meaning fill sentences.

(1) Temple | famous | Sannathy | is | SriLanka | in.

(2) wanted | English | Govermeni | to make | a | as | Subject | compulsory.

(3) Respect | youngesters | aught | know | to | elders | the | to.

IV) Fill in the blankes with a suitable word from withen the brackets.

The students have ( cleaned, cleaning, clean ) the the classroom thiss morning. they have ( swcep, swept, sweeping ) the floor. They have ( arranging, arrange, arranged ) the desks and chairs. Some one has ( clean, cleaned, cleaning ) the black board, Mohan has ( arrange, arranged, arranging ) flowers in the Vase.

V) Some English Sayings: சில பழமொழிகள்

(1) when wealth is lost nothing is lost
when health is lost something is lost
when character is lost everything is lost.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) some eat to live
some live to eat.

(3) Enjoy your breaksast
Share your lunch with your friend
Give your Dinner to your enemy

(4) Those who Do sin always hide
behind the deities.

**VI) Fill in the blanks with prepostions**

(a) Ranjith is a friend ..................... mine

(b) Public library are used ..................... all

(c) SriLanka is Famous ..................... its tae anb rubber

(d) We want many things ..................... food

(e) Tamil leaders could not agree ..................... themselves

(f) I reached Jaffna ..................... 4 P. M.

(g) It has been raining ..................... Yesterday

(h) The dog Sprang ..................... the lamb

**VII) Put the verbs between brackets into the past continuous or simple past tense**

When Mr. Ranjith left his office at 6 P. M. it (rain) hard. So he (run) as quickly as he could to the nearest bus-stop. As he (run) he bumped into an elderly woman and nearly (knock) her over.

S. Thuraírajah
(English Tutor)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான விளக்கம்

விளக்கில் இடும் மண்ணெண்ணெயுடன் சிறிதளவு உப்பையும் ( கறியுப்பு ) சேர்த்து இடுவதால் ஏன் விளக்கின் பிரகாசம் அதிகரிக்கின்றது?

- ❋ மேசை விளக்கு ஒன்றிலுள் இடும் மண்ணெண்ணெய்யுடன் சிறிது கறியுப்பைப் போட்டாலும் கறியுப்பு விளக்கின் திரியை அடைகின்றது.
- ❋ கறியுப்பு சோடியம் குளோரைட்டு என்ற இரசாயனப் பொருளால் ஆனது.
- ❋ சோடியம் உப்புக்கள் சுவாலையில் பிரகாசமான மஞ்சள் நிறத்துடன் ஒளிரும்.
- ❋ எனவே திரியில் கறியுப்பும் சேர்ந்து எரியும் போது, சோடியச் சுவாலை மஞ்சள் நிறமாக ஒளிரும்.
- ❋ இதனால் விளக்கின் பிரகாசம் அதிகரிக்கின்றது.

அரிக்கன் லாம்புக்குச் சிமினி இடப் பிரகாசம் அதிகரிக்கும் எவ்வாறு?

- ❋ சிமினி போடுமுன் அதற்கு அதிக அளவு ஒட்சிசன் சூழலின் வெளியில் இருந்து கிடைக்கும்.
- ❋ சிமினி போட்டதும் கீழ்த் துவாரத்தினூடாக மேற்காவுகை ஓட்டத்தினால் செல்லும் ஓரளவுவளியே கிடைக்கும்.
- ❋ இதனால் குறை தகனம் நிகழ்வதால் காபன் துணிக்கைகள் வெப்பம் அடைந்து எரிவதால் பிரகாசிக்கும்.
- ❋ இதனால் மேற்காவுகை ஓட்டம் தொடர்ந்து நிகழும்.
- ❋ எனவே விளக்கின் பிரகாசம் கூடும்.

எரியும் தீச்சுவாலையின் மேல் ஈரமான சாக்கைப் போட்டதும் ஏன் அணைந்து விடுகின்றது?

- ❋ பொருட்கள் எரிவதற்கு ஒட்சிசன் தேவை.
- ❋ சாக்கினால் மூடும்பொழுது ஒட்சிசன் கிடைக்காது போகும்.
- ❋ இதனால் எரிவதற்கு வேண்டிய நிபந்தனை இல்லாது போக அணைந்து விடுகின்றது.
- ❋ ஈரச்சாக்கு எரியும் பொருளின் வெப்பநிலையைக் குறைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று கல் அடுப்புக்களை விடச் சூட்டடுப்பு ஏன் சிறந்தது?

* மூன்று கல் அடுப்பைப் பயன்படுத்தும் பொழுது எரிதலால் பெறப்படும் வெப்பம் பெருமளவு சூழலுக்கு இழக்கப்படும்.
* சூட்டடுப்பில் வெப்பம் வெளியேற அதிக இடைவெளி இராது.
* எனவே சூட்டடுப்பில் வெப்ப இழப்பு குறைக்கப்படுவதனால் உயர்ந்த வெப்ப சக்தியைப் பெறலாம்.

விளக்குச் சுவாலை மஞ்சள் நிறமாகவும், மண்ணெய் அடுப்புச் சுவாலை நீலமாகவும் இருப்பதன் காரணம் என்ன?


* விளக்குச் சுவாலை ஒளிர்சுவாலை எனவும், மண்ணெய் அடுப்புச் சுவாலை ஒளிராச் சுவாலை எனவும் அழைக்கப்படும்.
* விளக்கில் குறைதகனம் நிகழ்வதால், புகையும் காபனும் உண்டாகின்றது.
* காபன் துணிக்கைகள் வெப்பத்தினால் பிரகாசிப்பதால் ஒளிர் சுவாலை உண்டாகின்றது.
* ஒளிராச் சுவாலையில் பூரண தகனம் நிகழ்வதால் போதிய ஒட்சிசன் கிடைக்கும்.
* இதனால் புகையும் காபனும் உண்டாகாது எனவே நீலநிறச் சுவாலை பெறப்படும்.

## 1997-ல் அன்னதானப் பணிக்கு பேருதவி புரிந்த அன்பர்கள் விபரம்

| | ரூபா |
|---|---|
| திரு. சி. இராமகிருஷ்ணா ஆசிரியர், நெல்லியடி | 200 |
| திரு. சி. சிவலோகம், இமையாணன் | 100 |
| திருமதி. சி. இளையதம்பி, இமையாணன் | 600 |
| திரு. க. தம்பிராசா ஆசிரியர், இமையாணன் | 500 |
| திரு. பொ. ரவிச்சந்திரன், இமையாணன் | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநெறித் தொண்டர்



சிவநெறித் தொண்டர் கலாநிதி க. கனகராசா அவர்கள் தமது செயற்பாடுகளால் இந்த மண்ணில் என்றும் அழியாத ஒரு இடத்தைப் பெற்றுக் கொண்ட ஒரு பெருந்தகை. எமது பண்பாட்டிற்கு வேண்டத்தகாத மாற்றங்கள் ஏற்பட்டு வரும் இக்காலகட்டத்தில் சிவநெறியில் வாழ்ந்து காட்டி சைவசமய மக்களுக்கு ஓர் வழிகாட்டியாக அவர் விளங்கினார். ஆத்மீகத்துறையில் மட்டுமன்றி சமூகத்தின் பல்வேறு துறைகளிலும் தேவையறிந்தும், காலமறிந்தும் தனது சேவைகளை விரிவுபடுத்தி செயற்பட்டமை இவரது தனித்துவத்திற்குக் காரணமாக அமைகின்றது.

தொழிற்றுறை, மரநடுகை, சுதேச மருத்துவத்துறை, பசுவளர்த்தல், திருவள்ளுவர் போன்ற பெரியவர்களின் நெறியைப் பேணுதல், தேவையறிந்து பல்வேறு தர்மங்களை மேற்கொள்ளல் போன்ற பலதுறைச் செயற்பாடுகளிலும் இவர் செய்த சேவைகள் அளவிடற்கரியவை.

எமது ஞானச்சுடர் மலரினைப் பாராட்டி வாழ்த்துரைகள் தெரிவித்ததுடன் எமது மலர் பிரகாசிப்பதற்கு நன்னெறிக்கருத்துக்களை எமது மலரில் இடம் பெறச்செய்தமையும் மனம் கொள்ளத்தக்கது. 22 - 07 - 98 இல் இறைபதம் அடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதற்கு இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தார் ஆறுதல் அடைவதற்கும் ஞானச்சுடர் தன் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

# புரட்டாதி மாத வாராந்த நிகழ்வுகள்

04 – 09 – 98 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 – 00 மணியளவில்

உற்சவ கால நிகழ்வு

**விடயம் : 'இன்னிசை'**

வழங்குபவர்: திரு. L. திலகநாயகம்போல் (பக்கவாத்திய சகிதம்)

---

11 - 09 – 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 –30 மணியளவில்

அறிமுகவுரை: திரு. செ. அருட்பிரகாசம்

**சொற்பொழிவு :**

**'தியானமூர்த்தி முருகமூர்த்தி'**

வழங்குபவர்: திரு. வ. ஆ. தங்கமயில் (நில அளவையாளர்)

---

18 - 09 – 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 – 30 மணியளவில்

அறிமுகவுரை: பண்டிதர் க. முத்துவேலு

**சொற்பொழிவு : 'எங்குமாகி நின்றாய்'**

வழங்குபவர்: திரு. ஐ. சண்முகலிங்கம்

(ஆசிரியர் ம. ம. வித், நெல்லியடி)

---

25 - 09 - 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் - மாத வெளியீடு

# புரட்டாதி-1998

வெளியீட்டுரை; திரு. க. தங்கவடிவேல்

(இளை. ஆசிரியர் கம்பர்மலை)

ஆய்வுரை: ஆசிரியர் திரு. க. நடேசன் (தெனியான்)

(தேவரையாளி இந்துக் கல்லூரி, வதிரி)

---

இவ்வண்ணம்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( ஜனவரி – ஒக்டோபர் ) வெளியிடப் படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 1999 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்கு பொருத்தமான, தரமான ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு சமய பெரியார்களையும் அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு :
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org